LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

U.G. DEGREE EXAMINATION – **LANGUAGES**

FIRST SEMESTER – **NOVEMBER 2022**

UTL 1102 – TAMIL - I

Date: 26-11-2022 Dept. No. Max. : 100 Marks

Time: 01:00 PM - 04:00 PM

பகுதி-அ *(10x2=20 மதிப்பெண்கள்)*

விடையொன்றுக்கு ஓரிரு சொற்களில் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

01. பல்லுயிரும் பலஉலகும் படைத்தளித்துத் துடைக்கினும் ஓர்–இடம் சுட்டுக.
02. ஏட்டில் படித்ததோடு இருந்துவிடாதே
ஏன் படித்தோம் என்பதையும் மறந்து விடாதே –பொருள் தருக
03. வாத்தியார் வீட்டுப்பிள்ளை நான்
வயக்காட்டுத் தும்பைப்பூ நீ – தெளிவுபடுத்துக.
04. தடித்தஓர் மகனைத் தந்தை ஈண்டடித்தால் — இடம் சுட்டுக.
05. வயலெல் லாம்நற வறற்புனல் பாயும் — பொருள் தருக.
06. மாயூரம் வேதநாயகர் எழுதிய நூல்களில் இரண்டினைக் குறிப்பிடுக.
07. கரி, கறி - பொருள் தருக.
08. அண்ணாக்கயிறு, அமக்களம்- பிழை நீக்கி எழுதுக.
09. வல்லின ஒற்று மிகும், மிகா இடங்களைக் கண்டறிக.
அ) கட்டி+போட்டான்= -------- ------ ஆ) வெட்டி+பேச்சு=----------

10. பால்,திணைப் பிழைகள் நீக்கி எழுதுக. அ) அம்மா பொம்மையை உடைத்தது இவள்தான்,
ஆ) எனக்கு ஆங்கிலம் சொல்லிக் கொடுத்தது சாம்சன்

பகுதி-ஆ *(5x7=35 மதிப்பெண்கள்)*

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரைப் பக்க அளவில் விடையளிக்க.

11. ''துன்பம் வெல்லும் கல்வி'' எனும் கவிதை வழி பட்டுக்கோட்டையார் அறிவுறுத்தும்
செய்திகளைச் சுருக்கி வரைக.
12. நும் பாடப்பகுதியில் அமைந்துள்ள ஹைக்கூ கவிதைகளின் மூலம் ஈரோடு தமிழன்பன்
நிலைநாட்ட விரும்பும் கருத்துகளை விரித்துரைக்க.
13. நீதி நூலில் 'தெய்வமுண்டெனல்' எனும் தலைப்பில் மாயூரம் வேதநாயகம் கூறும்
கருத்துகளை விளக்கியுரைக்க.
14. பாண்டியனின் சிறப்புகளை முத்தொள்ளாயிரம் மூலம் விளக்கியுரைக்க.
15. உலா, கலம்பகம் குறித்து எழுதுக.
16. மேனாட்டுத் தமிழ் அறிஞர்கள் எவரேனும் இருவர் குறித்து ஆய்ந்துரைக்க.
17. 'வலம்புரிச்சங்கு' சிறுகதை மூலம் வெளிப்படும் சமூக ஏற்றத் தாழ்வு நிலையை எழுதுக.

பகுதி-இ *(3x15=45 மதிப்பெண்கள்)*

மூன்று பக்க அளவில் விடையளிக்க.

18. தமிழின் சிறப்புகளாகப் பேரா. பெ.சுந்தரனார் கூறும் கருத்துகளை மதிப்பீடு செய்க.

[அல்லது]

நும் பாடப்பகுதியில் அமைந்துள்ள திருமூலரின் திருமந்திரம் வெளிப்படுத்தும்
அறச் சிந்தனைகளைச் சுருக்கி வரைக.

19. புதுக்கவிதையின் தோற்றம் வளர்ச்சி குறித்து ஆய்வு செய்க.

[அல்லது]

உரைநடை குறித்தும், அதில் சிறந்து விளங்கிய உரைநடை ஆசிரியர்கள் குறித்தும்
ஆய்ந்துரைக்க.

20. 'இளைப்பாறும் சுமைகள்' எனும் சிறுகதையின் கதைமாந்தர்களது பண்பு நலன்கள் குறித்து
விளக்குக.

[அல்லது]

'ராஜா வந்திருக்கிறார்' சிறுகதையின் மூலம் வெளிப்படும் சமூகச் சிந்தனைகளைத் தொகுத்துரைக்க.

&&&&&&&&&&&